[1981 பிப்ரவரி 12

இணைப்பு V.

சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. இரா. தாமரைக் கனி அவர்கள் கீழ்க்கண்ட 1,329 எண்ணுள்ள உடுக்குறி யிடாத வினாவை எழுப்பியுள்ளார்கள்.

(அ) நிலவள பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருவில்லிப் புத்தூர் வட்டத்தில் 1975 முதல் 1979 முடிய எத்தனை ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கு உள்ளதாக கொண்டுவரப் பட்டுள்ளன.

(ஆ) மேற்படி திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது.

விடை :

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1974–75 முதல் 1978–79 முடிய சாகுபடிக்கு மண்வள பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்ட வேலையின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வருடம்.		சம உயர வரப்பிடுதல்.	நிலம் சமன்செய்தது	பாசனக் குழாய் அமைத்தல்.
		(ஏக்கரில்)		
1974–75	..	31.54	27.95	
1975–76	..	414.55	52.44	..
1976–77	..	1,387.74	..	4.14
1977–78	..	1,227.03	4.98	22.07
1978–79	..	8,73.01	$91.12\frac{3}{4}$	$64.38\frac{1}{2}$
மொத்தம்	..	3,933.87	$176.49\frac{3}{4}$	$90.59\frac{1}{2}$

(ஆ) மண்வளப் பாதுகாப்புத் திட்ட நோக்கங்களும் செயல்படும் விதமும்.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருவில்லிப் புத்தூர் தலைமையிடமாகக் கொண்டு 1968ஆம் ஆண்டு முதல் மலைப்பகுதிகளிலும், சம வெளிகளிலும் மண்வளப்பாதுகாப்புத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1–4–1974 முதல் வறட்சிப் பகுதி திட்டத்தின் கீழ் இவ்வுட் கோட்டம் செயல்பட்டு வருகிறது.

1981 பிப்ரவரி 12]

இராமநாதபுரம் மாவட்டத்தில் நீண்டு பரந்து கிடக்கும் மானாவாரி நிலங்கள் மழையை நம்பியே விவசாயத்திற்கு ஏற்ற நிலமாக மாறும். நிலைமையிலுள்ளது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளாக இம்மாவட்டம் இம்மாநிலத்தில் இருமுறை தாக்குதலுக்குட்பட்டு வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு வருகிறது. இவ்விரு இடர்பாடுகளிலிருந்து மானாவாரி நிலங்களில் வளமான மேல் மண்ணைப் பாதுகாக்கவும், வறண்ட காலங்களில் சிறிதளவே கிடைக்கும் மழை நீரை சேர்த்து வைக்கவும், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறையின் கீழ் மண்வள பாதுகாப்புத் திட்டம் கீழ் காணும் பணிகளைச் செய்து வருகிறது.

(1) சமவெளியில் :

(1) சரியான நிலங்களில் சம உயர வரப்புகள் அமைத்தல்:

(2) பாசன வசதி உள்ள மேடு பள்ளமான நிலங்களைச் சமன் செய்து கொடுத்தல்.

(3) பாசனக் குழாய் அமைப்புகள் அமைத்துக் கொடுத்தல்.

(4) ஓடைகளில் தடுப்பணைகள் கட்டுதல்.

(5) நீருற்றுக் குட்டைகள் அமைத்தல்.

(2) மலைப்பகுதிகளில் :

(1) சம உயரக் கற் சுவர்கள் அமைத்தல்.

திட்டம் செயல்படும் விதம்.

விவசாயிகளிடம் தேவையான ஒப்பந்தப் பத்திரங்கள் வாங்கப்பட்டு இவ்வலுவலகத்தில் மூலம் விவசாயிகளின் நிலங்களில் மண் வளப் பாதுகாப்பு வேலைகள் செய்து தரப்படுகின்றன. திட்டம் முடிவுபெற்ற 2 ஆண்டுகளுக்குப் பின் 10 வருட சம தவணைகளில் இதற்கான பணம், நிர்வாகச் செலவு சேர்க்கப்பட்டு பிறகு (அரசினர்) மானியம் கழிக்கப்பட்ட பின் அப்போது அமுலில் உள்ள வட்டியுடன் விவசாயிகளிடம் இருந்து வசூல் செய்யப்படுகிறது. சமவெளிகளில் செய்யப்படும் மண் வளப் பாதுகாப்பு வேலைகளுக்கு 1977—78ஆம் ஆண்டு சிறிய, பெரிய விவசாயிகளுக்கு 25 சதவீதம் மானியமும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு 33 1-3 சதவீதம் மானியமும் அரசாங்கம் அனுமதித்து வருகிறது. 1978—79ஆம் ஆண்டு முதல் சிறிய விவசாயிகளுக்கு 25 சதவீதம் மானியமும், மிகச் சிறிய விவசாயிகளுக்கு 33 1-3 சதவீதம் மானியமும் அளிக்கப்படுகிறது. புறம்போக்கு நிலங்களில் அமைக்கப்படும் கசிவு நீர் குட்டை அமைத்தல். மற்றும் தடுப்பாணை கட்டும் வேலைகளுக்கு 100 சதவீதம் மானியமும் அளித்து வருகிறது. உழுது தரும் பணிக்கு முழு பணமும் கடனாக வழங்கப்பட்டு, 2 வருடங்கள் கழித்து 10 வருட சம தவணைகளில் வட்டியுடன் பிடித்தம் செய்யப்படுகிறது.